## நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம்

# வடக்கு மாகாண அரச பொறுப்பேற்கும் இல்லம், சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள், பெண்கள் பாதுகாப்பு இல்லம், வைத்தியசாலை அலகுகள் மற்றும் சமூகத்தில் அடையாளம் காணப்படுகின்ற ஆதரவற்ற பிள்ளைகளை மகவேற்பு வழங்குவதற்கான நடைமுறைகள் தொடர்பான கொள்கை ஆவணம்

வடக்கு மாகாணத்திலுள்ள அரச பொறுப்பேற்கும் இல்லம், அரசினால் அல்லது தொண்டர் அமைப்பினால் அல்லது தனியார் அமைப்பினால் பராமரிக்கப்படும் பெண்கள் பாதுகாப்பு இல்லம், வைத்தியசாலை அலகுகள் மற்றும் சமூகத்தில் அடையாளம் காணப்படுகின்ற இரு பெற்றோரையும் இழந்த, கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற சிறுவர்களின் உயரிய நலன் கருதி அவர்களைக் குடும்பச் சூழலில் வைத்து பராமரிப்பதற்கான ஏற்பாடுகளில் இலங்கைச் சிறுவர்களுக்கான மாற்று பராமரிப்பு தொடர்பிலான தேசியக் கொள்கையின் பிரிவு 5.2ற்கமையவும், ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் உறுப்புரை 20, உறுப்புரை 21 ற்கமையவும், 1941ம் ஆண்டு 24ம் இலக்க மகவேற்பு கட்டளைச் சட்டத்திற்கு அமையவும் மகவேற்பு வழங்குவதும் ஒன்றாகும். இத்தகைய இல்லங்களில் உள்ள மேற்குறித்த வகையிலான சிறுவர்களை மகவேற்பு வழங்குவதற்கான பொருத்தமான பெற்றோரை தெரிவு செய்வற்கான முழுப் பொறுப்பும் வடக்கு மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தினது அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட மகவேற்புக் குழுவினைச் சார்ந்ததாக இருக்கும்.

இவ் மகவேற்புக் குழுவில்

- **ஆணையாளர், - தலைவர்**

  **நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், வட மாகாணம்**
- **பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம் வடமாகாணம்**
- **குழந்தை வைத்திய நிபுணர்**
- **சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தர்**
- **தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை பிரதிநிதித்துவப்படுத்தும் உத்தியோகத்தர் ஆகியோர் குழுவில் அங்கத்தவர்களாக உள்ளடக்கப்படுவர்.**



நா.வேதநாயகன்
ஆளுநர்
வட மாகாணம்

சுஜீவா சிவதாஸ்
ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு
சேவைகள் திணைக்களம்
வடமாகாணம்

**மேற்குறித்த நிலையங்களால் அடையாளப்படுத்தப்படுகின்ற சிறுவர்களை மகவேற்பு செய்வதற்கான ஏற்புடையவர்கள்**

**1941ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க மகவேற்பு கட்டளைச் சட்டம், 1943ஆம் ஆண்டின் 54ஆம் இலக்க மகவேற்பு (திருத்தக்) கட்டளைச் சட்டம், 1992ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க மகவேற்புச் (திருத்தச்) சட்டம் ஆகியவற்றுக்கமைவாக,**

1. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்
2. விண்ணப்பதாரர் 25 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல்
3. விண்ணப்பதாரர் பிள்ளையிலும் பார்க்க 21 வயதிலும் உயர்வாக இருத்தல் வேண்டும்.

இத்தகைய பிள்ளைகளை மகவேற்புச் செய்ய விரும்பும் விண்ணப்பதாரிகள் மற்றும் நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்.

1. நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள மாவட்ட அலுவலகங்களில் மகவேற்பிற்கான விண்ணப்பப்படிவம் (ந.பி.சே51(North)) பெறப்பட்டு உரிய ஆவணங்களுடன் மாவட்ட அலுவலகங்களிற்கு ஊடாகவோ அல்லது நேரடியாக கீழ்வரும் முகவரியில் உள்ள நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

**ஆணையாளர்,**
**நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம்,**
**வட மாகாணம்,**
**மீனாட்சியம்மன் வீதி,**
**பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

2. இவ்விண்ணப்பங்களிலிருந்து பொருத்தமான விண்ணப்பதாரிகளை முன்னுரிமைப்படுத்தி பிள்ளைகளின் உச்ச நலனை பேணத்தக்க வகையில் பிள்ளைகளுக்கான மாற்றுப் பராமரிப்பினை வழங்கக்கூடிய பெற்றோர் தெரிவு செய்யப்படுவர்.

3. திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்களை அரையாண்டுக்கு ஒரு தடவை விண்ணப்பதாரிகளின் தகமைகளையும், மகவேற்பு பிள்ளைகளின் நிலமைகளையும் கருத்தில் கொண்டு மகவேற்பு விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யும் குழுவின் மூலம் நேர்முகப் பரீட்சைக் குழுவுக்கு சிபார்சு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவர்.



நா.வேதநாயகன்
ஆளுநர்
வட மாகாணம்

சுஜீவா சிவதாஸ்
ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு
சேவைகள் திணைக்களம்
வடமாகாணம்

4. விண்ணப்பதாரி எவ் நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் வாழ்கின்றாரோ அவ்நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட நன்னடத்தை உத்தியோகத்தரிடம் குறித்த விண்ணப்பதாரி தொடர்பாக கீழ்க்குறிப்பிடப்பட்ட விடயங்களை உள்ளடக்கிய "மனை நிலைமை" பற்றிய அறிக்கையினை (Home study report) கோருதல்.

- பெற்றோரின் வயது
- பெற்றோரின் தொழில் வருமானம், தொழிலின் நிச்சயத் தன்மை
- பெற்றோரின் கல்வித் தகைமை
- வீட்டுரிமை, வீட்டின் தன்மை
- தங்கியிருப்போர் விபரம்
- சேமிப்பு விபரங்கள் (வங்கி வைப்புக்கள் மற்றும் ஏனைய சேமிப்புக்கள்)
- அவர்களால் எதிர்பார்க்கப்படும் வயதினையுடைய குழந்தையை வளர்ப்பதற்கு அவர்கள் பொருத்தமானவர்களா என்பது பற்றிய விபரம்
- குடும்பச் சூழல் மற்றும் அவர்களின் நடத்தைக் கோலங்கள் (கணவன் மனைவிக்கிடையிலான ஒற்றுமைத் தன்மை, அயலவர்களுடனான உறவு நிலை)
- குறித்த மகவேற்புப் பெற்றுறோருக்கு மகவேற்பளிப்பது தொடர்பில் நன்னடத்தை உத்தியோகத்தரின் சிபாரிசு.

**மகவேற்பு நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பதாரிகளை தெரிவு செய்யும் குழு**

இவ் மகவேற்பு விண்ணப்பதாரிகளை நேர்முகப்பரீட்சைக்குத் தெரிவு செய்யும் குழுவில் அங்கம் வகிப்போர்

1. உதவி ஆணையாளர் - தலைவர்
2. சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தர் - உறுப்பினர்
3. சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தர் - உறுப்பினர்
4. நன்னடத்தை உத்தியோகத்தர்(தலைமைப்பீடம்) - உறுப்பினர்
5. விடய உத்தியோகத்தர் - சட்டப்பிரிவு - உறுப்பினர்

**இவ் மகவேற்பு விண்ணப்பதாரிகளை முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யும் போது கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்கள் கருத்தில் கொள்ளப்படும்.**

1. உள்நாட்டில் வசிக்கும் விண்ணப்பதாரிகள்.
2. பிள்ளைகள் இல்லாத விண்ணப்பதாரிகள்.
3. சட்டரீதியாக திருமணம் செய்து இருவரும் சேர்ந்து வாழும் பெற்றோர்கள்.



நா.வேதநாயகன
ஆளுநர்
வட மாகாணம்

சஜீவா சிவதாஸ்
ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு
சேவைகள் திணைக்களம்
வடமாகாணம்

4. வடமாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்களும், வடமாகாணத்திற்குள் வசிக்கும் அல்லது கணவன் மனைவி இருவரில் ஒருவராவது வடமாகாணத்திற்குள் பிறந்து தொழில் நிமித்தம் வேறு மாகாணத்திற்குள் வசிக்கும் விண்ணப்பதாரிகள்.
5. சொந்தமான வீட்டுரிமையையும்,வீட்டு வசதிகளையும் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள்
6. பொருளாதார ரீதியில் வலுவான நிரந்தர தொழில் மூலம் வருமானத்தைப் பெறும் விண்ணப்பதாரிகள்.
7. மகவேற்புச் செய்யப்படவுள்ள பிள்ளையின் உச்சநலன் கருதி பிள்ளைக்கு கல்வி அறிவைப் பெற்றுக்கொடுக்கக் கூடிய வகையிலான கல்வி அறிவுடைய விண்ணப்பதாரிகள்.
8. உடல், உள ஆரோக்கியத்தினைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள்.
9. 55 வயதிற்குட்பட்ட விண்ணப்பதாரிகள் (இலங்கை மத்திய வங்கியின் சமூக பொருளாதார தரவு-2024ம் ஆண்டு அறிக்கையின் பிரகாரம், ஒரு மனிதனின் ஆயுட்காலம் 76.6வருடங்கள் எனக் கணிப்பிடப்பட்டுள்ளதன் அடிப்படையில் மகவேற்பு வழங்கக் கூடிய பிள்ளைக்கு 21 வயதாகும் வரை மகவேற்புப் பெற்றோரின் பராமரிப்பு கிடைக்கும் என்பதன் அடிப்படையில் இவ்வயதெல்லை தீர்மானிக்கப்பட்டுள்ளது.)
10. ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் உறுப்புரையின்படி குழந்தையின் வளர்ச்சிப் பாங்கின் தொடர்பறாமை மற்றும் அதன் இன, மத, மொழிப்பின்னணி என்பவற்றை கவனத்திற் கொள்ளல்.

5. கிடைக்கப்பெற்ற மகவேற்பு விண்ணப்பங்களை, விண்ணப்பதாரிகளின் தகமைகளையும், மகவேற்புப் பிள்ளைகளின் நிலைமைகளையும் அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமைப்படுத்தி பிள்ளைகளின் உச்ச நலனை பேணத்தக்க வகையிலான தகுதிவாய்ந்த பெற்றோர்கள் முன்னுரிமைப்படுத்தப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**இந் நேர்முகப்பரீட்சையின் போது கீழ்வரும் ஆவணங்களை மகவேற்பு குழுவிற்கு சமர்ப்பித்தல் வேண்டும்**

- கணவன் மனைவி இருவரினதும் பிறப்பு அத்தாட்சி பத்திரத்தின் மூலப்பிரதியும் புகைப்படப் பிரதியும்
- விண்ணப்பதாரா்களின் திருமணப் பதிவுச்சான்றிதழின் மூலப்பிரதியும், புகைப்படப் பிரதியும்
- தேசிய அடையாள அட்டையின் மூலப் பிரதியும், புகைப்படப்பிரதி
- கிராமசேவையாளரினால் வழங்கப்பட்ட குணநலச் சான்றிதழ்



நா.வேதநாயகன்
ஆளுநர்
வட மாகாணம்

சஜீவ் T சிவதாஸ்
ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்
வடமாகாணம்

- சொத்துக்கள் தொடர்பான ஆவணங்கள்
- விண்ணப்பதாரி இயற்கையாக கருத்தரிப்பதற்கான சாத்தியம் பற்றி உறுதிப்படுத்தும் மகப்பேற்று மருத்துவ நிபுணரது அறிக்கை
- விண்ணப்பதாரர்களின் உள உடல் தகுதியினை சான்றுப்படுத்தும் மருத்துவ சான்றிதழ்
- விண்ணப்பதாரர்களின் தொழில் தொடர்பான விபரங்கள் மற்றும் வருமான மூலங்களை சான்றுபடுத்தும் ஆவணம்

6. மேற்குறித்த ஆவணங்களின் அடிப்படையிலும், மகவேற்பு நேர்முகத் தேர்வின் அடிப்படையிலும் மகவேற்புக்குழு பரீட்சித்து திருப்திப்படும் பட்சத்தில் குழந்தையொன்றினை வழங்குவதற்கு தகுதி பெற்றோராக விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவர்.
7. மகவேற்பு பெற்றோருக்கான "பெற்றோரத்துவம்" தொடர்பான பயிற்சி நெறிகள் திணைக்களத்தினால் நடாத்துமிடத்து அப்பயிற்சி நெறியில் தவறாது கலந்து கொள்ள வேண்டும்.
8. விண்ணப்பதாரர்களிற்கு பொருத்தமான பிள்ளை ஒன்று அரச பொறுப்பேற்கும் இல்லம் மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் அடையாளப்படுத்தப்படும் போது குறித்த விண்ணப்பதாருக்கு அறிவித்தல் வழங்கப்பட்டு பிள்ளையைப் பார்வையிடுவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.
9. விண்ணப்பதாரர் குறித்த பிள்ளையை மகவேற்பு செய்ய பூரண சம்மதம் தெரிவிக்கும் பட்சத்தில் குறித்த பிள்ளை மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு பிள்ளையின் உடல் உள ஆரோக்கியம் தொடர்பாக விண்ணப்பதாரருக்கு தெளிவுபடுத்தப்படும்.
10. விண்ணப்பதாரர்களுக்கு மகவேற்பு வழக்கொன்றினை மேற்கொள்வதற்கான உரிமம் ஆணையாளர், நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் வடமாகாணம் அவர்களால் வழங்கப்படும். இவ் உரிமம் பெறப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாதத்தினுள் விண்ணப்பதாரர் சட்டதரணி ஒருவரினூடாக மாவட்ட நீதிமன்றில் மகவேற்பு கட்டளைக்காக விண்ணப்பத்தை கோப்பிடலாம்.
11. விண்ணப்பத்தில் நீதிமன்றம் திருப்தியடைந்தால் நீதிமன்றம் மகவேற்புக் கட்டளையொன்றை அல்லது இரண்டு வருடத்திற்கு மேற்படாத இடைக்கால கட்டளையொன்றை வழங்கலாம்



நா.வேதநாயகன்
ஆளுநர்
வட மாகாணம்

சுஜீவா சிவதாஸ்
ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராம
சேவைகள் திணைக்களம்
வடமாகாணம்

12. **நீதிமன்றத்தினால் மகவேற்புக் கட்டளையொன்று ஆக்கப்பட்டதும்**

- புதிய மகவேற்பு பெற்றோர்கள் அவர்களுடைய மகவேற்புப் பிள்ளைக்காக புதிய பிறப்புச் சான்றிதழ் ஒன்றைப் பெறுதல் வேண்டும்.
- மகவேற்புப் பெற்றோரை பிரதிநிதித்துவம் செய்யும் சட்டத்தரணி மகவேற்புக் கட்டளையின் பிரதியொன்றை பதிவாளர் நாயகத் திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

**இலங்கையில் பிரசையாக இல்லாததும் இலங்கையை வாழிடமாகக் கொள்ளாததுமான அல்லது இலங்கையில் வதியாததுமான வாழ்கைத் துணைகளின் இணைந்த விண்ணப்பங்கள் வெளிநாட்டு மகவேற்பு விண்ணப்பங்களாக கொள்ளப்படும். இவ் விண்ணப்பதாரர்கள் பிள்ளை இரத்த உறவுள்ள ஒருவராக இருந்தாலன்றி பிள்ளைகளை சொந்த விருப்பில் தேடமுடியாது. இவர்களிற்கு அரச பொறுப்பேற்கும் இல்லம் ஒன்றில் உள்ள அல்லது 05 வருடத்திற்கு மேற்பட்ட வயதினைக் கொண்ட சிறுவர்களை நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஒன்றில் உள்ள பிள்ளை ஒதுக்கப்படலாம். இத்தகைய விண்ணப்பதாரர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் வருமாறு,**

1. வெளிநாட்டு விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்கள் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்

**ஆணையாளர்**
**நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்,**
**தொகுதி II**
**செத்சிரிபாய**
**பத்தரமுல்ல**
**கொழும்பு**

2. பிள்ளையொன்றை மகவேற்பதற்கான விண்ணப்பதாரர்களின் பொருத்தமான தன்மை பற்றிஉள்நாட்டு ஆய்வு அறிக்கையொன்றை வெளிநாட்டு சமூக நல முகாமை அல்லது வெளிநாட்டு சமூகநல திணைக்களம் மத்திய அரச நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளருக்கு வழங்கும்.

3. ஏற்கக் கூடிய உள்நாட்டு ஆய்வு அறிக்கை பெறப்பட்டதன் மீது ஆணையாளர் வெளிநாட்டு விண்ணப்பதாரர்களிற்குப் பொருத்தமான பிள்ளையொன்றை அடையாளங் காண்பதுடன் குறித்த விண்ணப்பதாரர்களிற்கு ஒதுக்கல் கடிதம் அனுப்பப்படும்.



நா.வேதநாயகன்
ஆளுநர்
வட மாகாணம்

சுஜீவா சிவதாஸ்
ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு
சேவைகள் திணைக்களம்
வடமாகாணம்

4. மகவேற்பு நடைமுறைகள் முடிவடையும் வரை ஆகக்குறைந்தது 4-5 வாரங்கள் இலங்கையில் தங்கியிருக்குமாறு விண்ணப்பதாரர்கள் வேண்டப்படுவார்கள் அவர்கள் தங்கியிருக்கும் காலத்தில் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தினால் நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிக்குமாறு வேண்டப்படுவார்கள்.

**வெளிநாட்டு விண்ணப்பத்தின் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் வடமாகாணத்திலுள்ள குழந்தையொன்றினை மகவேற்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாக மத்திய அரச ஆணையாளர் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தினால் அறிவுறுத்தல் வழங்கப்படுமிடத்தும்**

**வெளிநாட்டு விண்ணப்பதாரர்கள் வடமாகாணத்திலுள்ள குழந்தையொன்றினை மகவேற்க விரும்பி வடமாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்துடன் தொடர்பினை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்திலும்**

- அவ்விண்ணப்பதாரிகளது ஆவணங்கள் வடமாகாண நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் நேர்முகப் பரீட்சைக்குழுவினால் பரிசீலிக்கப்படுவதுடன் விண்ணப்பதாரிகள் நேரடியாகவோ அல்லது ZOOM செயலி ஊடாகவோ நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுமாறு வேண்டப்படுவர்.
- நேர்முகப்பரீட்சையின் பின்னர் விண்ணப்பதாரிகளுக்கு குழந்தையொன்று ஒதுக்கப்பட்டு அக்குழந்தையை விண்ணப்பதாரிகள் மகவேற்புச் செய்வதற்கு சம்மதம் தெரிவிக்கும் சந்தர்ப்பத்தில் மகவேற்புப் பிள்ளை தொடர்பான விபரங்கள் மத்திய அரச ஆணையாளர், நன்னடத்தை மற்றும் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், அவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

5. விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சையில் தெரிவு செய்யப்படுமிடத்து அவர்கள் பிள்ளையைப் பார்க்க முடியுமென்பதுடன் அப்பிள்ளையை மருத்துவ பரீட்சையொன்றுக்கு அழைத்துச் செல்லலாம்.

6. விண்ணப்பதாரர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளிற்கு சமூகமளிக்குமாறு வேண்டப்படுவார்கள்.

7. விண்ணப்பத்தில் நீதிமன்றம் திருப்தியடைந்தால் நீதிமன்றம் மகவேற்பு கட்டளையொன்றை வழங்கல்.

8. மகவேற்புக் கட்டளையை பெற்றதன் மீது மகவேற்புப் பெற்றோர்கள் மகவேற்புச் சான்றிதழ், மகவேற்ற பிள்ளைக்கு இலங்கை கடவுச்சீட்டு மற்றும் மகவேற்புப் பெற்றோருடைய நாட்டிலிருந்தான வீசா ஆகியவைகளைப் பெறுதல் வேண்டும்.



நா.வேதநாயகன்
ஆளுநர்
வட மாகாணம்

சுஜீவா சிவதாஸ்
ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு
சேவைகள் திணைக்களம்
வடமாகாணம்